ஓம் சரவணஜோதியே நமோ நம

**ஆசான் அரங்கமகா ஞானியரின் அருளாசி நூலிலிருந்து**
**குருநாதரின் 51வது தவசித்தி விழாவிற்கு**
**மகான் ஆறுமுக அரங்கமகானின் ஆசி விளக்க நூல்**

20.09.2026

1. சரவண ஜோதி மகா சூட்சுமமாகி
சகலரும் ஏற்றுகின்ற ஜோதி தன்னில்
சரவணப் பெருமானோடு அரங்கன் யானும்
சாட்சியாக சகலருக்கும் நல்ல காட்சியாக தந்து அருள் புரியவே

2. அருள் புரியவே இந்த அற்புதங்கள்
பிரணவக் குடிலில் அவரவர்க்கும்
வரம் தரும் வண்ணம் நடந்துவர
வரமாக இன்று அரங்கன் யானும் இனிதே

3. வழங்குவேன் எந்தனின் ஐம்பத்தி ஒன்றாவது
தவசித்தி விழா நாளில் எந்தனின் சீடர்
பெருமக்கட்கும் ஓங்காரக்குடிலுக்கும்
தொண்டர் பெருமக்கட்கும்

4. ஓங்காரக்குடில் நோக்கி வருகை புரிகின்ற
உலக மக்கட்கும் அவர்கட்கு உண்டான
நலம் குறித்தும் ஓங்காரக்குடிலின்
அன்னதானத்தின் பாதுகாப்பு வளர்ச்சி குறித்தும்

5. இனிதே ஆசிதனை அரங்கன் யான்
உரைப்பேன் அப்பனே பிரணவக் குடிலில்
மகா மக்கள் பெருங்கூட்டத்தை கண்டேன்
முருகப்பெருமானும் யானும் ஜோதியாக

6. மகிழ்ச்சி கலந்த ஆசியை அவரவரும்
ஆக்கமும் ஆற்றலும் ஆயுள் பலமும்
அனைத்தும் பெறும் வண்ணம்
வரமாக ஜோதி ரூபில்

7. காட்சியும் ஆசியும் தந்துள்ளேன்
உள்ளபடி இன்று வருகை புரிந்த
மக்கள் அனைவருக்கும் உயர்வுக்கும்
அவர்கள் பாதுகாப்புக்கும் அரங்கன்

8. என் பரிபூரண ஆசி உண்டு
உத்தமமாய் நிர்வகிக்கின்ற நிர்வாகத்திற்கும்

குடிலின் உள்பணி வெளிபணி என
தொண்டு புரிகின்ற தொண்டர் பெருமக்கட்கும்

9. அரங்கன் யான் இன்று சக்தியும்
வரமும் கூடுதலாக வழங்கியுள்ளேன்
உள்ளபடி தொண்டர்களிடையே
சோர்வில்லா வண்ணம் ஆற்றலும் சுறுசுறுப்பும்

10. நிர்வாகத்திலும் திடமும் தெளிவும்
அன்பர்களை அரவணைத்து வழிநடத்தும்
ஆக்கமும் இன்னும் சிறப்புற
அரங்கன் யான் இன்று வரமீந்துள்ளேன்

11. உள்ளபடி இவ்விழாவில் மக்கள் படையோடு
ஞானிகளும் வந்து பிரணவக் குடிலில்
என்ன நிகழ்கின்றது என
சூட்சுமமாய் வந்து கண்டு களித்து

12. அவர்கள் குடிலின் அருளமுதையும் உண்டு
அன்பர்கட்கு இன்னும் சூட்சும வரம்
அன்னவர்களும் பங்கு பெற்றுள்ளனர்
உள்ளபடி ஓங்காரக்குடில் இந்தவித நன்னாளில்

13. உயர்வுபட இன்னும் மகாசக்தி கூடியுள்ளது
மாதர்மமாம் அன்னதானம்
மகத்துவம் பெற்று விளங்குவதாலே
இன்று அருளமுதை உண்ட அனைவருக்கும்

14. ஆரோக்கியம் பலம் ஆயுள் கீர்த்தி
பிணி சோடை இல்லாத வண்ணம்
சர்வபாதுகாப்பிற்கும் வரம் தரப்பட்டுள்ளது
உள்ளபடி ஓங்காரக்குடிலின் தர்மம்

15. அன்னதானம் எவ்வித தடையும்
குறுக்கீடும் இன்றி சிறக்க
மேலும் வளர்ந்து ஓங்கவும்
அதற்கு உண்டான பொருளாதார பலமும்

16. அன்பர்கள் நிதி கேட்டு
செல்லுகின்ற வசூல் தடமெல்லாம்
அரங்கன் என் அனுகூலமும்
சிறப்பாய் இருக்கும் இன்னும் ஆற்றல்பட

17. தர்மபலம் பெருகவும் தர்மம் வளரவும்
குடில் தர்மம் அல்லாது கிராம தர்மங்களும்
மற்ற கிளை சங்கங்களிலும்
மகிழ்ச்சியும் நிறைவும் தாராள தனபுழக்கமும்

18. தொண்டர் படைகளும் பெருக
கிளைகள் சிறக்கவும் விரிவடையும்
விரிவடையவும் அரங்கன் யான்
அருள் செய்வேன் ஆக்கமுடன் இன்று

19. எந்தனுடைய தவசித்தி விழாவில்
என் தடம் அணுகி வணங்கியவர்க்கும்
என் சீடன் ராம்குமார் கரம்பட
தீட்சை ஏற்றவர்க்கெல்லாம்

20. யானே தீட்சை வழங்கியுள்ளேன்
உள்ளபடி இந்தவித தீட்சை அவர்கட்கு
இந்த பிறவிப்பிணி என்கின்ற
சோடையை நீக்கி பிறவா

21. பெரும்பேற்றையும் தந்தருள் புரியக் கூடும்
ஆக்கமுடன் ஞானத்தை ஆற்றல்பட
வேண்டி வந்தவர்க்கு இவை பிறவிக்கு
ஞானசித்தி உண்டு உண்டு

22. உலக மக்களுக்கும் சர்வ பாதுகாப்புக்கும்
உலகத்திற்கு எந்த சூழலிலும்
பிணி சோடை கிருமி சோடை
என இடர்பாடுகள் பேராபத்தும்

23. வாராத வண்ணம் அரங்கனின் தர்மமும்
சன்மார்க்க கொள்கையும் தொண்டர்களுடைய
விரிவான வளர்ச்சி செயல்பாடுகளும்
பாதுகாப்பு தந்து காத்தருளும்

24. இந்திய தேசம் அல்லாது
மலேசியாவிலும் லண்டன்
மற்ற தேசங்களிலும் அரங்கன் யான்
ஆக்கமோடு அவர்கட்கு

25. வரம்பல தந்து வருகின்றேன்
வருகவே வருங்காலம்

இன்னும் பல தேசங்கள்
சன்மார்க்கத்தின் வழி இணையும்

26. இன்னும் பல மதம் சார்ந்த
மக்களெல்லாம் மதங்கடந்த
மக்களெல்லாம் அரங்கன் என்பால்
அதீத பற்று கொண்டு இணைந்து

27. இந்த சன்மார்க்கம் வளரவும் விரிவடையவும்
உலகமே ஏற்றுக் கொள்ளும் வண்ணம்
மாற்றமும் நடக்க அரங்கன் யான்
பரிபூரண ஆசி உண்டு

28. அப்பனே தொண்டுள்ளம் புரிபவர்களும்
தொண்டனாக இணைந்து தர்மத்தில்
பொருளுதவி செய்து கொண்டு
இயன்ற வண்ணம் என் சிந்தையிலே இருக்கும்

29. எல்லா மக்கட்கும் அரங்கன் யான்
அவர்கள் விருப்பங்கள் அத்தனையும்
அரங்கேற இன்று வரம் பல தந்துள்ளேன்
எல்லா வளமும் அன்பர்கள் பெருகவும்

30. நிலை உயரவும் விரும்புகின்ற வழியில்
அவர்களெல்லாம் சன்மார்க்க
உயர் மாந்தர்களாய் ஞானிகளாய்
சிறந்து பெரும்பேறு காணவும்

31. அரங்கன் யான் அருள்புரிந்துள்ளேன்
உள்ளபடி வளர்ச்சிக்கும் உயர்வுக்கும்
இன்னும் ஓங்காரக்குடில் நோக்கி
பதவி மாந்தர்களும் சீமான்களும்

32. அரசியல் மற்றும் அதுகடந்த
அன்பர்களெல்லாம் மேல்நிலை உள்ளவர்கள்
வந்து சரணாகதி கொள்ளவும்
இந்த தர்மத்தை இன்னும் வளர்க்கவும்

33. அரங்கன் என் ஆசி
அனுகூலம் உண்டு உண்டு
அரங்கன் யான் அருளிய
ஆசி விளக்கம் முற்றே.

–சுபம்–

ஓம் முருகப்பெருமான் திருவடிகள் போற்றி போற்றி